# தகனம்தான் அடக்கமல்ல;

பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 சித்திரை 17 ஐ/ அவ்: 9 இதழ்: 77
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 29-4-77

## அஸ்தி கிழக்கு செல்லும்!

யாழ்ப்பாணம், வெள்ளி

மறைந்த மூதறிஞர் தந்தை செல்வாவின் பூதவுடல் நாளை சனிக்கிழமை மாலை ஐந்து மணியளவில் யாழ் நகரில் தகனம் செய்யப்படும்.

யாழ். விளையாட்டரங்குக்கு முன்பாக நிர்மாணிக்கப்படும் பதினைந்து அடி உயரமான மேடை மீது வைத்து தந்தை செல்வாவின் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இதனிடையே, தந்தையின் பூதவுடலைக் கிழக்குமாகாணத்திற்கு எடுத்துச்செல்லும் ஏற்பாடுகள் நேற்றுப் பகல் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது. விமான வசதிகள் கிடைக்காத காரணத்தால் இம்முயற்சி கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தந்தையின் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்ட பின்னர் அஸ்தி, ஈழநாட்டின் தமிழ்க் கூறும் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படும். அங்கு நினைவுச் சமாதிகள் எழுப்பப்படும்.

இதே நேரத்தில் அஸ்தியை தமிழகத்துக்கும் எடுத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

### இன்றுவரும்ஊர்வலம்

வட்டுக்கோட்டை, உடுவில் தொகுதி தமிழ் இளைஞர் பேரவையினர் இன்று காலை 9 மணிக்கு ஊர்வலமாக வந்து அஞ்சலி செலுத்துவார்கள்.

இந்த ஊர்வலத்தில் சிநோர் ஊழியர்களும், வட்டுக்கோட்டை கடற்றொழிலாளர் முன்னணியும் கலந்து கொள்ளும்.



தந்தை செல்வநாயகத்தின் பூதவுடலுக்குப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா, அமைச்சர்கள் செல்லையா குமாரசூரியர், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, ரி. பி. இலங்கரத்ன, சபாநாயகர் ஸ்ரான்லி திலகரத்ன ஆகியோர் அஞ்சலிசெலுத்துகையில் எடுத்த படம்.
படம்: அசோகா ஜெகநாதன்.

# ஜே. ஆர். இன்று வருகின்றார்

# கருணாநிதி வரமாட்டார்!

யாழ்ப்பாணம், வெள்ளி

**மறைந்த மூதறிஞர் தந்தை செல்வாவுக்கு ஐக்கியதேசியக்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று காலை அஞ்சலி செலுத்துவார். இவருடன் நூரளை எம். பி. திரு. காமினி திசநாயக்காவும் வருகின்றார்.**

### வானொலியில் அஞ்சலி

மூதறிஞர் செல்வாவின் இறுதியாத்திரையை தெல்லிப்பளை முதல் யாழ்ப்பாணம் வரை, நாளை வானொலியில் நேர்முக வர்ணனையாக அஞ்சல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இறுதி யாத்திரையை இலங்கை அரசாங்க 'பிலிம் யூனிட்' நாளை திரைப்படம் எடுப்பதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எஸ். ரி. ஆர். பிலிம்ஸாரும் மற்றும் சிலரும் இறுதியாத்திரையை திரைப்படமாக எடுப்பார்கள்.

### தூதுவர்கள் அஞ்சலி

மறைந்த தலைவருக்கு வெளிநாட்டுத் தூதுவர்களும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். கொழும்பிலுள்ள எஸ். ஜே. வி. இல்லத்தில், புல்லுமலை நல்லரத்தினம் முன்னர் உருவாக்கிய எஸ். ஜே. வி. யின் மார்பளவுச்சிலையும், அவரின் பெரியதொரு புகைப்படமும் உதயசூரியன் கொடியின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. இதனருகில் அனுதாபம் தெரிவிக்கும் புத்தகமொன்றும் உள்ளது. இன்று இந்திய தூதுவர், கனடா தூதுவர் மற்றும் நீதியரசர் வி. ரி. தாமோதரம், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸ்டான்லி சேனநாயக்கா, திரு. சிட்னி சொய்ஸா ஆகியோர் எஸ். ஜே. வி. இல்லம் சென்று அஞ்சலி செலுத்தினர்.

# நாளை இறுதியாத்திரை

யாழ்ப்பாணம், வெள்ளி

மறைந்த மூதறிஞர் தந்தை செல்வாவின் இறுதியாத்திரை சனி காலை தெல்லிப்பளையிலிருந்து யாழ்நகர் நோக்கி ஆரம்பமாகும். இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வோர் கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டு தமிழனுக்கே தன்னை அர்ப்பணித்த உத்தமருக்கு அஞ்சலி செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்' என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமது செய்தியில் மேலும் அவர் தெரிவிப்பதாவது:

'தமிழ் இனத்தின் தேசியத் தந்தை செல்வநாயகம் அவர்களின் பொன்னுடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 7மணி வரை வீரசிங்கம் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். அதன் பின் பேழை மூடப்படும்.

நாளை சனிக்கிழமை காலை தெல்லிப்பளையில் தந்தை அவர்களின் இல்லத்திலும், தெல்லிப்பழைத் தேவாலயத்திலும் சமயக் கிரியைகள் நடைபெறும். இதனைத் தொடர்ந்து சனிக்கிழமை காலை 9மணிக்கு தெல்லிப்பளையிலிருந்து அலங்காரஊர்தியில் யாழ்ப்பாணம் நோக்கி இறுதியாத்திரை ஆரம்பமாகும்.

### கருணாநிதி வரமாட்டார்

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி வரமாட்டார். ஆனால் கழகத்தின் சார்பில் முன்னாள் அமைச்சர் திரு. பா. உ. சண்முகம், திரு. ஆற்காடு வீரசாமி ஆகியோர் இங்கு வந்து இறுதியாத்திரையிலும் அஞ்சலிக் கூட்டத்திலும் கலந்து கொள்வார்கள் என்று திரு. மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

மலேஷியன் கை மார்க்
## சாம்பிராணி
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்,
கொழும்பு-10
போன்: 24261—5.

★ விற்பனையாகின்றன!
## 5-ம் வகுப்பு
புலமைப் பரிசிற் பரீட்சைக்கான பயிற்சிகள்

| | | | |
|---|---|---|---|
| பொது உளச்சார்பு | - | விலை ரூபா | 5-00 |
| தமிழ்மொழி | - | ” | 3-00 |
| கணிதம் | - | ” | 3-00 |

ஞானசுரபி வெளியீடு
கிடைக்குமிடம்:
ஞானசுரபி புத்தகக் கம்பனி
217, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 6041

## மானிப்பாய் கோவில்பற்று
## ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய்

1. லொறி பொடி உருவாக்குவதற்கான விண்ணப்பங்கள் கோரல்.

சங்கத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் சங்க அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விண்ணப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர வைப்புப்பணம்: ரூபா 200-00
முடிவு திகதி: 7-5-77 நண்பகல் 12 மணிக்கு முன்.
சகல விபரங்களையும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2. நெசவாளர், உதவியாளர்கள் தேவை.

மேற்படி சங்கத்தின் சண்டிலிப்பாய், நவாலியில் உள்ள கைத்தறி நெசவு நிலையங்களுக்கு தகுதியுள்ள விண்ணப்பக்காரரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி: 7-5-77 நண்பகல் 12 மணிக்கு முன்.

அனுப்ப வேண்டிய முகவரி:
பொது முகாமையாளர்,
மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.

பொது முகாமையாளர்.

25-4-77 6044

## தென்மராட்சி மேற்கு
## ப. நோ. கூ. சங்கம், கைதடி

### வெற்றிடம் - III-ம் தரப்
### பொது முகாமையாளர் பதவி

மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

வசிப்பிடத் தகமைகள்:- குறைந்தளவு 2 வருடமாவது அந்த மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருக்கவேண்டும்.

வயது:- 23-க்கும் — 50-க்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

வேதனம்:- 340 — 590
.....................
15×10 20×5

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 15-5-77ந் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

தேவையான தராதரங்கள் மற்றும் தகமைகள் பற்றிய விளக்கங்கள் யாவையும் பெறுவதற்காக சிழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்து மூலமோ அன்றேல் நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெறவேண்டின் முத்திரை ஒட்டப்பட்ட சொந்த முகவரியிட்ட கடித உறை அனுப்பப்படல்வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

தலைவர்.

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
26-04-1977. 6040

## வரி விளம்பரம்

மிளகாய் குருமன் நோய்க்கு தண்ணீரில் கரைத்துத் தெளிக்கப்படும் சல்பர் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். கையிருப்பில் சிறிதளவே தற்போது உள்ளபடியால் முந்திக்கொள்ளவும். 'இரத்தினசிங்கம்ஸ்', பிரதான வீதி, பண்டத்தரிப்பு. 6026

## WANTED
One Welder (Electrical & Gas)
One Black Smith
One Labourer
One night Watcher (preferably a retired man from uniformed service)
Apply on or before 4th May, 1977.
To Advt. No. 6035,
C/o Eela Nadu, Jaffna.
6035

## நீதி நிருவாகச் சட்டம் 283-ம் பிரிவின் கீழ்
## இடைக்காலக் கட்டளை

சிறிலங்கா குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்
வலயம்: யாழ்ப்பாணம்.
இல: 338

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஐயாமுத்து கைம்பெண் அழகம்மாவின் மரணசாதனமற்ற ஆதனம் பற்றிய விடயத்தில்

காலஞ்சென்றவர்

வல்வெட்டித்துறை கொத்தியால் ஒழுங்கை பொன்னுத்துரை கைம்பெண் மனோன்மணி.

விண்ணப்பதாரர்

எதிர்

வல்வெட்டித்துறை கொத்தியால் ஒழுங்கை, கதிரவேற்பிள்ளை கைம்பெண் மகேஸ்வரி. எதிர்வாதி

281-ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 2-3-77 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்திலிருக்கும் கூற்றுகளை பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டதென திருப்தியடைந்ததின் பேரில் 31-5-77க்கு முன்னதாக எவராவது எதிர்க்காரணங்காட்டினாலன்றி மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரர் தத்துவப்பத்திரத்தைப் பெறுவதற்கு உரியவரென்றும், அவ்வண்ணமே தத்துவப்பத்திரம் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படுமென்றும் யாழ்ப்பாண நீதி நிருவாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளையாகியஎனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயற்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி.

1977-3-14 6040

## ஆலயங்களில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், வெள்ளி

தம்முடைய கொள்கையாலும், சேவையாலும் தமிழ்மக்கள் இதயங்களைக் கொள்ளை கொண்ட தமிழர் தலைமகன் தந்தை செல்வாவின் ஆன்மா சாந்தியடைய ஆலயங்களில் மக்கள் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்றுக்காலை திருப்பலிப்பூசைகளில் விசேட பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேவேளை அனைத்து மத வழிபாடுகளும் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. (சி-இ)

## இளவாலை
## புனித யூதாததேயு திருநாள்

மேற்படி திருவிழா 29-4-77 வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்குத் தொடங்கும் மாலை ஆராதனையுடன் ஆரம்பமாகி 8-5-77 ஞாயிறு காலை 6-15 மணிக்கு யாழ். ஆயர் அதிவந்தனைக்குரிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்படும் திருநாட் பூசையுடன் முடிவடையும். பக்தர்கள் அனைவரும் இவ்வாராதனைகளில் பங்குகொண்டு புனித யூதாததேயுவின் ஆசி பெறுவதுடன், ஆலயக் கட்டிட நிதிக்கும் உதவுமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்றனர்.

இங்ஙனம்
6048 பங்குத் தந்தை

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்
## பதவி வெற்றிடங்கள்

### பொதுமுகாமையாளர் தரம் II

500—825
.....................
20 × 10, 25×5

தகைமைகள்:

1. கூட்டுறவுப் பயிற்சியுடன் மூன்று வருடகாலம் அனுபவமுடைய பட்டதாரி.
2. இரண்டு வருடகால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தராதரப் பத்திரம் உடைய பட்டதாரி அல்லது
3. தரம் III பதவியொன்றில் ஒரு வருட கால அனுபவமும் கூட்டுறவு வேலையாளர் உயர் தரத் தராதரப் பத்திரம் பெற்றுள்ள பட்டதாரி.
4. 50 இலட்சம் ரூபா வருடாந்த மொத்தவிற்பனையாக கொண்ட வியாபாரத் தாபனமொன்றின் மேல் முகாமையாளர் பதவியொன்றில் 5 வருட கால அனுபவத்தினையுடைய ஒருவர்.
5. 10 வருட கால அனுபவமும் பொருந்திய முன்னையநாட் கூட்டுறவு பரிசோதகர்.
6. 25 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்.

### கணக்காளர் தரம் II

400 — 650
.....................
15×10, 20×5

1. ஒரு வருட கால அனுபவத்துடன் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி,
2. ஒரு வருடகால அனுபவத்துடன் கொழும்பு சிரேட்ட தொழில்நுட்பக்கல்லூரியில் கணக்கியலில் பெற்ற டிப்புளோமா
3. கூட்டுறவு வேலையாளர் உயர்தரத்தராதரப் பத்திரத்துடன் அத்தகைய ஓர் நிறுவனத்தில் பெற்றுள்ள இரண்டு வருடகால அனுபவம்.
4. 7 வருடகால அனுபவம்பொருந்திய முன்னைநாட் கூட்டுறவு பரிசோதகர்.
5. வயது 25க்கும் 45க்கு உட்பட்டவர்.

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில், காகிதஉறையின் இடதுபக்கமூலையில் "...............பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிக்கப்பட்டு, 14-5-1977ந் திகதிக்கு முன் "தலைவர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.
1977-04-26 6033

## மரண அறிவித்தல்
### திருமதி கனகம்மா செல்லையா

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் திரு. சி. செல்லையா அவர்களின் பிரிய பத்தினி **திருமதி கனகம்மா** காலமாகிவிட்டார். அன்னார் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் செ. சிவஞானம் C. A. S., காலஞ்சென்ற செ. சிவசுப்பிரமணியம் (துறைமுகக் கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்), நிர்வாகப் பொறியியலாளர் செ. செல்வரத்தினம், திருமதி சிவமலர் வேலாயுதபிள்ளை, ஆசிரியை திருமதி புஷ்பமலர் பஞ்சாட்சரம் ஆகியோரது அருமைத் தாயாரும், யாழ்ப்பாணம் தொழிற் திணைக்கள எழுதுவினைஞர் க. வேலாயுதபிள்ளை, திருமதி மகேஸ்வரி சிவஞானம், திருமதி சரோஜினி சிவசுப்பிரமணியம், திருமதி குலதேவி செல்வரத்தினம், ஆசிரியர் த. ந. பஞ்சாட்சரம் ஆகியோரது மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-4-77 வெள்ளிக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு குடும்ப மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். 6050

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# 'தந்தை மூட்டிய விடுதலைத் தீ சுடர்விட்டு எரியட்டும்!

## அவரின் இலட்சியத்துக்கு எம்மை அர்ப்பணிப்போம்!''

— மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், வெள்ளி

''தந்தை செல்வா, தமிழ் ஈழத்தின் தானைத் தளபதி, அவர் ஆணையிட்டால், இலட்சோப இலட்சம் இலட்சிய இதயங்கள் அவர் கட்டளையை நிறைவேற்றிடக் காத்திருக்கும். தமிழ் ஈழம் அமைத்திட வேண்டும். தந்தையின் இலட்சியத்தைநிறைவேற்றுவோம்'' என்று தமிழ்இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் திரு. மாவை சேனாதிராசா வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் தமது செய்தியில் மேலும் தெரிவிப்பதாவது:

''தமிழ்ஈழத்தின் தேசியத் தந்தை; தமிழுலகின் விடுதலைக்கு வழிகாட்டி; அந்த ஒளிவிளக்கு அணைந்தாலும்; அந்த ஆத்மா அறத்தோடுகூடி எம்மையெல்லாம்வழிநடாத்தி அந்தத் தமிழ்ஈழ இலட்சியத்தை நிறைவேற்றியே தீரும்.

''தந்தை மூட்டிவைத்த அந்த விடுதலைத் தீ எம் இதயமெல்லாம்-உடலெல்லாம்சுடர் விட்டெரிந்து கொண்டேயிருக்கும். தந்தைசெல்வா அணையா விளக்கு, அழியாத இலட்சியச் சுடர்விளக்கு. எமக்கெல்லாம் கலங்கரை விளக்கம்.

''தந்தை செல்வாவும் எம்மையெல்லாம் ஆளாக்கி விட்டுத் தமிழ்ஈழ விடுதலைக்கு எம்மைத் தியாகத்தீயிலே அர்ப்பணித்து விட்டு அமைதியாக உறங்கிவிட்டார். அவர் காட்டிய வழியில் அடி எடுத்து வைத்துவிட்டோம். தியாகத் தீயில் குதித்துவிட்டோம். எம்உழைப்பை, வியர்வையை, இனத்தை, உயிரைத்தியாகஞ் செய்வோம். எம்இரத்தத்தால் எழுதவேண்டுமா? உயிரால் நிரப்பவேண்டுமா? தந்தை இட்ட கட்டளையை மீறமாட்டோம்- நிறைவேற்றியே தீருவோம் அந்தத்தெய்வம் இட்ட கட்டளை, தமிழ்ஈழ விடுதலை- ஓயுதல் செய்யோம் தலைசாயுதல் செய்யோம்.

''ஒரே கொடி-உதயசூரியன் கொடி. அதன்கீழ் ஒரேதலைமை தந்தை செல்வா. அதற்கு அடுத்தபடி தந்தையின் கட்டளை-அமிர் அண்ணா தலைமையிலே ஒரே இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியாய்- எதிர்காலத்தில் தமிழர் விடுதலை இயக்கமாய், கடமை-கண்ணியம் - கட்டுப்பாடு காப்போம்- வழிநடப்போம்.

''தந்தைசெல்வா தமிழ்ஈழம் படைத்த தெய்வத்தின்மீது ஆணையிட்டு அழைக்கின்றேன். இலட்சிய இதயங்களே! இயக்க உடன் பிறப்புக்களே! தமிழ்ஈழ விடுதலைக்குத் தியாகத்திலே எம்மை அர்ப்பணிப்போம். ஒரே அணியில் திரண்டிடுவோம் வாருங்கள். அது ஒன்றுதான் தந்தை செல்வாவுக்குத் தமிழினம் செய்யக் கூடியஇலட்சியச்சமர்ப்பணம்-காணிக்கை- இறுதிமரியாதை என அழைப்பு விடுக்கின்றேன்.''

# தமிழினத்தின் நம்பிக்கைச் சொத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

''தமிழினத்தின் நம்பிக்கைச் சொத்தைப்பாதுகாத்து என்னிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள் அதனை தமிழர் கூட்டணியினருடம் ஒப்படைக்கிறேன்.'' என்று யாழ்.ஆஸ்பத்திரியில் மூதறிஞர் செல்வாவின் பூதவுடல் தாங்கிய பேழையைப் பொறுப்பேற்றுப் பேசுகையில் மூதறிஞர் செல்வாவின் புதல்வர் திரு. எஸ்.சந்திரகாசன் கூறினார்.

திரு.சந்திரகாசன் மேலும் கூறியதாவது; எந்த நாட்டிலும்,எந்த தலைவருக்கும் கிடைக்காத வகையில் ஆஸ்பத்திரி சகல ஊழியர்களும் ஒன்று சேர்ந்து கடமையாற்றி உள்ளார்கள். சிறந்தவைத்திய சிகிச்சையளிக்கப் பட்டிருக்கிறது.உலக நிபுணர் டாக்டர் இராமமூர்த்தி, எந்தநாட்டிலும் செய்யாதசேவையை தான் இந்த தலைவருக்கு செய்துள்ளதாகவும், அவரிடம் உள்ள தனிப்பற்றே இதற்கு காரணம் என்று என்னிடம் கூறினார்.

கடந்த 34 தினங்களாக தலைவரை, ஒருதகப்பனை எவ்வாறு மகன் பராமரிப்பானோ அதேமாதிரி இவ்வைத்திய சாலை வைத்தியர்களும், தாதிகளும், அற்றெண்டுமார்களும், பராமரித்தமைக்கு, எமது நன்றியை தெரிவிக்கிறோம். (கு-க)

## அரியாலைப் பகுதியில்...

அரியாலை, வியாழன்

செல்வாவின் மரணச்செய்தி அறிந்த அரியாலை, நாயன்மார் கட்டு வாலிபர்கள் கறுப்புக் கொடிகளை வீதிகளின் குறுக்கேயும், வீடுகளிலும் கட்டித் தமது அனுதாபத்தைத் தெரிவித்தனர்.

வீதிகளின் குறுக்கே தோரணங்கள் கட்டியதுடன் தலைவரின் படங்களையும் ஆங்காங்கே கட்டியுள்ளனர். நாயன்மார் கட்டுச் சந்தியிலிருந்து செம்மணிச் சந்திவரை ஒவ்வொரு மின்சாரத் தூண்களிலும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன. அதைப்போல கச்சேரி நல்லூர் வீதியிலும்பெரிய கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன. கடைகள் பூட்டப்பட்டுள்ளன. பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. (அ)

# தந்தை செல்வா நினைத்ததை நிச்சயம் வென்றெடுப்போம்

## காசியின் அனுதாபச் செய்தி

யாழ்ப்பாணம்,வெள்ளி

''தந்தை செல்வா எங்களை ஆற்றல் மிக்க அனாதைகளாக விட்டுச் சென்றுள்ளார். இருப்பினும் அவர் நினைததை அவர் கொண்ட இலட்சியததை நிச்சயம் நாம் வென்றெடுப்போம்.''



இவ்வாறு கவிஞர் காசி ஆனந்தன் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமது அனுதாபச் செய்தியில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

தந்தை செல்வா ஒருபெரிய தலைவர் எங்களில் உயிரை ஏற்றிவிட்டு அவர் பிணமாகி விட்டார்.

கூண்டினுள்ளே இருந்து வெளிவர போராடிய அடிமைப்பறவைகள் நாம். எங்களுக்குமுன்னே இருந்த தலைமைப் பறவையை இழந்து தவிக்கின்றோம்.

சிறகுகளைவிரித்துவானத்தில் அவரோடு பறப்போம் என நாம் நம்பிருந்தோம். அவரோ கூண்டின் உள்ளேயே சமாதியாகிவிட்டார்?

அனாதைகளாக அவர் எங்களை விட்டுச் சென்றிருக்கிறார். அதே நேரத்தில் ஆற்றல் மிக்க அனாதைகளாக எம்மை அவர் விட்டுச் சென்றிருப்பதால் நிச்சயம் அவர் நினைத்ததை எங்கள் காலத்திற்குள் செய்து முடிப்போம்.

ஒரு மனிதராக இருந்த தந்தை செல்வா 'தமிழ் ஈழத்தின் மந்திரமானார்.

தமிழ் ஈழ விடுதலை கிடைக்கும் வரைக்கும் கிடைத்த பின்பும் தந்தை செல்வா என் என்னும் மந்திரம் தமிழ் ஈழம் முழுவதும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

'தந்தை செல்வா' என்னும் மந்திரத்தை உச்சாடனம் செய்யும் போதெல்லாம் ஏனைய மந்திர உச்சாடனங்களுக்கு ஏற்படும் ஆவேசத்தைவிட பன்மடங்கு ஆவேசத்தை தமிழினம் பெறும்.(இ)

## ஜெயப்பிரகாஷுக்கு விசேட விருது

புதுடில்லி, ஏப். 28

இந்திய சர்வோதய தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளுக்காக 'ராஷ்டிரபூஷண்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இந்தியநிறுவனம் ஒன்று முதல்தடவையாக இப்பட்டத்தை வழங்குகிறது.

இப்பட்டத்துடன் சான்றிதழும் ஒரு லட்சம் ரூபாவும் திரு. ஜெயப்பிரகாஷுருக்கு வழங்கப்படும். (இ)

## 'உலகத் தமிழருக்கு அதிர்ச்சிதரும் செய்தி'

யாழ்ப்பாணம், வெள்ளி

'தமிழ் இனத்தின் விடுதலைக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த தியாகி செல்வாவின் மறைவு இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட ஈடில்லாத இழப்பாகும். இக்கட்டான ஒரு கட்டத்தில் நிகழ்ந்த செல்வாவின் இழப்பு தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட பேரிடியாகும்'

இவ்வாறு வண்ணை நகர் இளைஞர் முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு.த. சிவஞானரஞ்சன் மூதறிஞரின் மறைவு குறித்து விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'செல்வாவின் மறைவு ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி அனைத்துலகத தமிழருக்கும் அதிர்ச்சியும் துக்கமும் தரும் செய்தியாகும்' என்று அவர் தமது செய்தியில் மேலும் தெரிவிததுள்ளார்.

## ஜா-எல இளைஞர் பேரவை அஞ்சலி

கொழும்பு, வியா.

''ஈழத்திலே தமிழன் என்று ஒருஇனமுண்டு-அதற்கு தனித்துவமான தன்மானம் சுதந்திரம் உண்டென உலகுக்குக்காட்டிய தன்னிகரில்லாத் தலைவனின் இழப்பு தமிழ் மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத பெருநஷ்டம். அன்னாரின் கனவு நனவாக சுதந்திரத் தமிழ்ஈழம் உருவாக நாம் எம்மையே அர்ப்பணிப்பதே அவரின்அளப்பரிய பணிக்கு நாம் செலுத்தும் அன்புக்காணிக்கை''

ஜா-எல தமிழ் இளைஞர் பேரவை விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

# 6 கோடி தமிழரின் தலைவர் செல்வா

## கடைகள்பூட்டித்துக்கம் அனுட்டிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

''மூதறிஞர் செல்வாவின் இழப்பு தமிழினத்தின் பேரிழப்பு''.

இவ்வாறு மூதறிஞர் செல்வாவின் மறைவு குறித்து வட இலங்கை வர்த்தக, கைத்தொழில் ஸ்தாபனங்களின் சம்மேளனத்தின் தலைவரும் வலிகிழக்கு விவசாயிகள் சங்கத் தலைவருமான திரு. முருகேசு பூபாலசிங்கம் விடுத்தஇரங்கற் செய்தியில்குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ப்பெரியார், தமிழரின் தனிப்பெருந்தலைவர், தமிழ் இனத்தின் காவலன் தந்தை செல்வாவின் இழப்பு தமிழினத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அவர் இலங்கையில் வாழும் தமிழர்களின் தலைவர் மட்டுமல்ல, உலகில் வாழும் 6கோடி தமிழரின் தலைவர் அவர். தமிழ்ஈழத்திற்கு அத்திவாரமிட்டவர் இன்று எம்மை விட்டுச்சென்றுவிட்டார். அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இறுதிநாளானசனிக்கிழமை வர்த்தக நிலையங்களையும், தொழில் நிலையங்களையும் பூட்டிக் கறுப்புக்கொடிகட்டித் தமது அனுதாபத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (கா-அ)

## நெஞ்சை உருக்கிய காட்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

'தந்தை செல்வாவின் பூதவுடல் நேற்றுப் பகல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை செயலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது அங்கு கூடிநின்ற பெண்களும் ஆண்களும் கதறிஅழுத காட்சி நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

மறைந்த சிவகுமாரனின் தாயார் திருமதி பொன்னுத்துரை,திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட பல பெண்கள் வாய்விட்டு கதறி அழுதனர். பலர் துக்க மிகுதியில் மயங்கிவிழுந்தனர்.

பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு வெளியேவந்த ஆதரவாளர் ஒருவர் வீதியில் விழுந்து புரண்டு அழுது கொண்டே 'தமிழ் போய்விட்டது' என்று கதறினர். (கி-இ)

# 'தலைவர்வழியில்செல்வோம்'

## யாழ். அரசியலதிகாரி செய்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

''தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளை சுமுகமாகத்தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் இச் சந்தர்ப்பத்தில் தந்தை செல்வநாயகம் மரணமானது தமிழ்ப்பேசும்மக்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டுச் சகல இனமக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்'' இவ்வாறு நல்லூர்த்தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினரும், யாழ். மாவட்ட அரசியலதிகாரியுமான திரு.சி. அருளம்பலம் மூதறிஞர் செல்வநாயகம் மறைவு குறித்துவிடுத்த இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளார்.

''தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தமிழர்விடுதலைக் கூட்டணித்தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்திய வேளையில் தெய்வாதீனமாக மூதறிஞர் நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதேவேளையில் மீண்டும் அவர் சுகம்பெற்றுதமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளை அரசுடன் கலந்துபேசித் தீர்ப்பார் என்றநம்பிக்கைகொண்டிருந்த தமிழ்மக்களை ஏமாற்றிவிட்டு இறைவனடிசேர்ந்துவிட்டார். அரசியலைத் தனது சொந்த நலனுக்காகப் பாவியாது தமிழ் மக்களுக்காக நேர்மையான வழியில் அவர்கள் இழந்த உரிமைக்காக இறுதிவரைக்கும் போராடிய தலைவர் வழியில் நாமும் சென்று எமது பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் திரு. சி. அருளம்பலம் தமது செய்தியில் தெரிவித்துள்ளார். (கா-அ)

**மணிவாக்கு**

இம்சை பலவீனர்களுடைய ஆயுதம்; அகிம்சை பலவான்களுடைய ஆயுதம்.

— காந்திமகான்

ஈழநாடு
THE EELANADU

# கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு.

அண்ணாவின் தாரகமந்திரம் இவை.

தந்தை செல்வநாயகம் வாழ்வில் கடைப்பிடித்த நெறிமுறையும் இதுவே.

ஈழத்தமிழ்மக்கள்கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நெறிமுறைகளை வாழ்க்கையில் கடைப்பிடித்தால்தான் சுதந்திர மக்களாக வாழமுடியுமென்று கூறிவந்தார்.

அகிம்சை, சத்தியம்என்ற காந்தீயவழிதான் மக்களுக்குச் சாந்திதரும் என்று அறிவுரை கூறிவந்தவர் தந்தைசெல்வா.

தந்தை மறைந்துவிட்டார்.

அவர்கூறிய அன்புமொழிகள், அறிவுரைகள் மறைந்துவிடமுடியாது. மக்கள் மறந்துவிடவும்கூடாது.

கத்தியின்றி,இரத்தமின்றி விடுதலைப்போராட்டம் நடத்தி உலகுக்கே அகிம்சை நெறியின் சக்தியை எடுத்துக்காட்டியவர் காந்தி மகாத்மா.

காந்திஜியின் மறைவின் பின் இந்தியாவில் வன்முறைச் செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்ட போது இந்தியமக்கள் மட்டுமல்லாது வெளிநாட்டவர் பலர்கூட வெட்கமும் வேதனையும் அடைந்தனர்.

ஈழத்துக்காந்தி என்று மக்களால் அழைக்கப்பட்டவர் தந்தை செல்வா.

சாதி, சமய, பிரதேச வேறுபாடுகள் நீக்கப்பட வேண்டும்; தமிழ் மக்கள் ஒரேஇனமாக வாழவேண்டுமென்று அதற்காக அல்லும்பகலும் சிந்தித்துச் செயலாற்றி வழிகாட்டியவர் தந்தைசெல்வா.

அவரின் மறைவுச்செய்தி கேட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மட்டுமல்ல தமிழ்மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் சோகம் குடிகொண்டுள்ளது.

அவர் ஏற்படுத்திய ஒற்றுமை அவரது மறைவின் பின்சிதைந்துவிடக்கூடாது.

அவர் கடைப்பிடித்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நெறிமுறைகள் அவருடன் மறைந்துவிடக்கூடாது.

அவரது இலட்சியம் அவருடன் போய்விடக்கூடாது.

பொதுத்தேர்தல் வருமுன்பே வேட்பாளர் நியமனத்தில் நடந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்க வேண்டும்.

பேரவைக்குப் போவதற்காகத்தொகுதிக்காக நடந்த ஆர்ப்பாட்டங்கள், ஆரவாரங்கள் மறந்து விடக்கூடியனவல்ல.

இந்த நிலையில்தான் தந்தை மறைந்தார்.

இணைப்புச்சக்தி மறைந்துவிட்டது.

இதனால் இன்றிருக்கும் தலைவர்களின் பொறுப்பும் கடமையும் அதிகமாகிறது.

தந்தைசெல்வா கட்டிக்காத்த ஒற்றுமை அவர் மறைந்ததும் பாராளுமன்ற ஆசனத்துக்காகப் போட்டிபோட்டு சிதறிவிட்டது என்ற அவப்பெயர் ஏற்படக்கூடாது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காக்கப்படவேண்டும்.

படமாளிகைகளை மூடும்படி சில இடங்களில் சிலர் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும்—

கடைகளை மூடும்படி சில இடங்களில் சில சம்பவங்கள் நடந்துள்ளதாகவும்—

வெளிவரும் செய்திகள் தந்தைசெல்வா கடைப்பிடித்த நெறிமுறைகளுக்கு முற்றிலும் மாறானவை.

தந்தை செல்வாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு தகிக்கும் வெய்யிலையும் தாங்கிக்கொண்டு நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

உணவுக்கும், தாகம் தீர்க்கத் தண்ணீருக்கும் அவர்கள் நம்பியிருப்பது சிற்றுண்டிச்சாலைகளையும், உணவுச்சாலைகளையும்தான்.

அன்றாடம் அரிசி, மா மற்றும் உணவுப் பொருட்களை வாங்கி அன்றையப் பொழுதைக் கழிக்கும் நிலையில் உள்ள தமிழ் மக்கள் ஏராளம்.

கடைகளைத் தொடர்ந்து பூட்டிவைக்க வேண்டுமென்று வற்புறுத்துவது ஏழை எளிய மக்களையே பாதிக்கும்.

இதை தந்தை செல்வா விரும்பியதில்லை.

மறைவுச் செய்தி கேட்டதும் பலர் தாமாகவே கடையடைப்புச் செய்தனர்.

தந்தையின் இறுதியாத்திரை நடக்கும் தினத்தன்று கடைகள் படமாளிகைகளை மூடி, கறுப்பு, வெள்ளைக் கொடிகளைத் தொங்கவிட்டு மறைந்த தந்தைக்கு இறுதி அஞ்சலி செலுத்துமாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதேசமயம் வெளியிடங்களிலிருந்து வரும்மக்களுக்கு நியாயமானவிலையில் உணவு மற்றும் சிற்றுண்டிகள் கிடைக்கக்கூடியதாகஉணவு சிற்றுண்டிச் சாலைகளின் உரிமையாளர்கள் கவனித்து பண்பைப் பாதுகாத்துக் கொள்வதும் மறைந்த தலைவருக்குச் செலுத்தும் அஞ்சலியும் நன்றிக்கடனுமாகும்.

"ஒற்றைஆட்சியின்கீழ்

## உரிமை பெற முடியாதென உணர்ந்த முதல் தலைவர்'

யாழ்ப்பாணம், வெள்ளி தமிழினத்தின் விடுதலை தனிமனித வீரதீரங்களால் சாதிக்க முடியாதென்பதையும் ஒற்றையாட்சியின்கீழ் தமிழினம் ஒருபோதும் உரிமைபெற முடியாதென்பதையும் முதன்முதலில் உணர்ந்த தலைவர் அமரர் செல்வநாயகம் ஆவார்.

வித்துவான் க. ந. வேலன் விடுத்துள்ள அனுதாபச செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.' அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

'தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தைத் தனிமனிதப் போராட்டத்திலிருந்து விடுவித்துச் சமுதாயப்

(7-ம் பக்கம் பார்க்க)

கடைசிநேர சோகக்காட்சி

# மலர்ப்படுக்கையில் மூதறிஞர் செல்வா

## கண்ணீர் வெள்ளத்தின் நடுவே பக்திக் கீதங்கள்

(சூ. யோ. பற்றிமாகரன்)

யாழ்ப்பாணம், வெள்ளி எரிக்கும் வெயிலிலே கரிக்கும் கண்ணீர் கரைபுரள, துடிக்கும் உணர்ச்சியினால் மக்கள் வெள்ளம் அலைபுரள நேற்று முன்தினம் நண்பகல் ஒரு மணியளவில் தந்தை செல்வாவின் பூதவுடல் தமிழர் விடுதலைக் கூட்டணி மண்டபத்தை வந்தடைந்தது.

மலர் வளையங்கள் பன்னூறு முன்னேவர- மங்கையர் மனம் பொறுக்காத கதறியழ- கிறிஸ்தவத் துறவிகளும் சன்யாஸ்திரிகளும் கூடிவர- மக்கள் வெள்ளத்தில் மிதந்துவந்தார் அமரர் செல்வா

சிவப்பு மட்டையிலேஉதய சூரியன் சின்னம் பொறித்த அட்டை அணிந்த தமிழர் விடுதலைச்கூட்டணித் தொண்டர்கள் கரங்களை இணைத்துப் பிடித்து அலைபோல் பொங்கிவந்த மக்களைக் கட்டுப்படுத்தினர்,

தளபதி அமிர்தலிங்கம், ஆனந்தசங்கரி, செல்லத்தம்பு, விஸ்வநாதன் போன்ற கூட்டணிப் பிரமுகர்கள் உதயசூரியன் கொடியினாலும் தமிழரசுக் கொடியினாலும் போர்த்தி இருந்த பேழையை தூக்கிவந்தனர்.

### காரியாலயத்தில் மனதை உருக்கும் காட்சி

காரியாலயத்துள் பூதவுடல் வந்தடைந்ததும் முன்பக்கக் கதவுகள் பூட்டப்பட்டன. பேழை திறக்கப்பட்டதும் திருமதி அமிர்தலிங்கம், சிவகுமாரனின் தாயார் போன்றோர் 'ஐயா, ஐயா' என வாய்விட்டுக் கதறி அழுதனர். அருகில் நின்ற தளபதி அமிர்தலிங்கத்தின் கண்களும் கலங்கின.

### இ. தொ. கா. உறுப்பினர் மயக்கம்

இ. தொ. கா. உறுப்பினர்களில் ஒருவராகிய சுப்பையா துயரமிகுதியால் பூதவுடல் இருந்த பேழையினருகே மயங்கி விழுந்தார். உடனே தண்ணீர் தெளித்து அவரின் மயக்கம் தெளிவிக்கப்பட்டது. எழுந்ததும் அவர் ஓடோடிச் சென்று பேழைஅருகில்நின்று மீண்டும் அழுதகாட்சி பார்ப்பவர் கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

### மண்டபம் அதிர கதறினார்

தோழிலே கறுப்புச் சால்வை அணிந்தவேறு ஒரு இ. தொ. கா. உறுப்பினரும் அடிக்கடி வாய்விட்டுக் கதறி அழுதவண்ணம இருந்தார். வலைஞர்பண்ணையைச்சேர்ந்த ஒருவர் துயரம்தாங்காது மண்டபமே அதிரும்படி கதறியழுதார். அவரை ஒருவாறு வெளியே அழைத்துவந்ததும் காரியாலயத்தின் பின்புறத்தில் மணலில் புரண்டு "தமிழ் போச்சு, பிள்ளைகள் இனி என்ன செய்வார்கள் எனக் குழறி அழுதார் அவர்.

### ஆஸ்பத்திரி ஊழியர்களின் பாச அஞ்சலி

ஆஸ்பத்திரியில் தந்தை செல்வாவை கடந்த ஒருமாதமாகக் கண்ணும் கருத்துமாக கண்காணித்த தாதிகளும்ஆஸ்பத்திரி பெண் ஊழியர்களும் "நாங்கள் இத்தனை பாடுபட்டதும் இதற்குத்தானா?'' என வாய்விட்டுக் கதறியழுதனர்.

### ஐயா இனி எப்போ இங்கு வருவீர்கள்?

வானம் இருண்டு தலைவரின் மறைவுக்குத் தானும் அஞ்சலி செலுத்துமாப்போல் பன்னீர் மழை தூவ கூட்டணிக் காரியாலயததிலிருந்து தந்தை செல்வாவின் பூதவுடல் வீரசிங்கம் மண்டபத்தை நோக்கி மாலை 5 மணிக்குப் புறப்பட்டது.

'மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்புத் தேவா - மன்னிப்புத் தாருமே இறைவா'' எனக் கிறிஸ்தவத் துறவிகளும் பாடகரும் பண்ணிசைக்க தலைவரின் பேழை காரியாலயத்தில் இருந்தும் புறப்பட்டது.

துயரம் தாங்காத மங்கையர்க்கரசி ஐயா இனி எப்போ இங்கு வருவீர்கள்' எனக் கதறி அழுதார். கூடவே மகளிர் பேரவை உறுப்பினரும் கதறி அழுதனர்,

வீதியில் பேழை இறக்கியதும் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் பேழையைக் காரினுள் வைத்துக் காரை மெதுவாகத் தள்ளிவந்தனர். அவ்வேளை வீதியின் இருமருங்கிலும் நின்ற மக்கள் கைகளைத் தலைமேல் குவித்துத் தங்கள் வணக்கத்தைச் செலுத்தினர்.

கிறிஸ்தவ கீதங்களும் தேவார திருவாசகங்களும் இசைக்கப்பட்ட வண்ணம் ஊர்வலம் மாநகரசபையை அடைந்தது. அவ்விடத்தில் வானதேவனும் மெதுவாக கண்ணீர் உகுத்துக் தலைவனுக்கு தனது மரியாதை காட்டினான்.

தமிழர் கூட்டணிப் பிரமுகர்களால் பேழை உள்ளே கொண்டு செல்லப்பட்டதும் மக்கள் அஞ்சலிக்காக மக்கள் முனியப்பர் கோவில் வரை கியூவில் காத்து நின்றனர்.

### வீரசிங்கம்மண்டபத்தில் பஜனைப் பாடல்கள்

வீரசிங்கம் மண்டபத்தின் நடுவினிலே பத்திக் கீதங்களைப் பாடிய வண்ணம் ஆண்களும் பெண்களும் அமர்ந்து இருக்கின்றனர். கிறிஸ்தவ முறையிலான பாடல்களும் இந்துப் பத்திப்பாடல்களும் கலந்து ஒலித்தவண்ணம் இருக்கின்றது.

### இளைஞன்போல் இதயத் தலைவன்

வெண்ணிற வேட்டியும் நாஷனலும் அணிந்து தலையிலே உதய சூரியன் சின்னம் பொறித்த காந்திக் குல்லாய் அணிந்து உதயசூரியன் சால்வையுடன் தந்தை செல்வா 16 வயது இளைஞன் போல் துயின்று கொண்டிருக்கிறார். அவரது மலர்ப் பாதங்களைத் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடிகளும் உதயசூரியனின் பொன்னிறக் கொடியும் மலர்க்குவியல்களும் மறைத்துக் குவிந்து கிடக்கின்றன.

பேழையைச் சுற்றி மலர் வளையங்கள் மலர்ப்படுக்கை போல் காட்சியளிக்கிறது. அருகினிலே குத்து விளக்குகளும் மெழுகு திரிகளும் எரிந்து தன்வாழ்வையே மெழுகு திரிபோல் தமிழர்க்கு அர்ப்பணித்த அன்புத் தலைவனின் வாழ்வைக் கூறாமல் கூறுகின்றன.

### வர்த்தகப் பிரமுகர்கள் அன்பளிப்பு

வர்த்தக பிரமுகர்கள் போட்டி போட்டுக் கொண்டு தந்தையின் இறுதிக் கிரிகைகளுக்கான பொருட்களை அன்பளிப்பு செய்கின்றனர். தந்தையின் பூதவுடலில் போடுவதற்கான நாஷனலுக்கான துணியை நாகமுத்து முதலாளி காலையிலே வழங்கியது முதல் இவ் அன்பளிப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### இலங்கைவானொலி அஞ்சலி

தந்தையை இழந்த தமிழர்காய் இலங்கை வானொலி பக்திப்பாடல்களை ஒலிபர

(7-ம் பக்கம் பார்க்க)

## ஈழத்தின் காந்தியென இலங்கும் செல்வா

- கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை -

வீடுசுட்டி வெற்றிகண்ட விழிப்பார் செல்வா
விரதமுற்றே உரிமைப்போர் விளைத்த செல்வா
பாடுபட்டுச் செந்தமிழின் பலத்தைச் சேர்த்த
பணிமுற்றிப் பரந்தவுயர் பாங்கார் செல்வா
நாடுதொட்டு நாட்டமுற்றே நடந்த செல்வா
நடந்துவந்த பாதையிலே எதிர்க்கண் சொல்லுச்
சூடுகளைத் தாங்கியுமே தொடர்ந்த செல்வா
சுகம்பெறுமுன் கடந்தாயோ சுவர்க்கம் நாடி

ஈழத்தின் காந்தியென இலங்கும் செல்வா
இதயத்திற் சாந்திதரும் இதஞ்சொல் செல்வா
வாழப்பொன் வகைசொல்லும் மதிசேர் செல்வா
வனப்புற்ற வழிசெல்லும் மனமார் செல்வா
ஆழிக்குள் முத்தார்ந்த அழகுச் செல்வா
அணிநிற்கும் தனையர்க்கு அமுதச் செல்வா
ஏழைக்கும் தோழமையாய் இணைந்த செல்வா
இறையன்பு நிறைவார்ந்த எங்கள் செல்வா

பஞ்சனைய நின்பாதம் பட்டாற் போதும்
பாறைகளும் கசிந்துருகிப் பசுமை யாகும்
கொஞ்சுமொழி நின்வாயாற் கொடுத்தாற் போதும்
கோகிலங்கள் கூடிவந்து கூர்ந்தே கேட்கும்
மஞ்சுதனில் வீற்றிருந்தே மனுநீ திக்கண்
மாட்சிநிறை ஆட்சிசெயும் மதியே வாய்ந்த
நெஞ்சுமலர் நேர்மைநெறிச் செல்வா இந்த
நிலவுலக வாழ்வுதனை நீத்த தேனோ!

# தன்னிகரில்லாத் தலைவன் தந்தை செல்வா!

—கு. செல்வச்சந்திரன், பி.ஏ.—

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாகத் தமிழ் பேசும் மக்களின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த மூதறிஞர் எஸ்.ஜே.வி. செல்வநாகம் மறைந்து விட்டார் என்ற செய்தி உலகத் தமிழர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கிய பேரறிஞர் அண்ணாத்துரை மறைந்து விட்டார் என்ற செய்திபோல் தமிழ் பேசும் மக்களை வாட்டிவதைக்கின்றது

தந்தை செல்வா அவர்கள் உயர்நீதிமன்றத்திலே சிவில் அப்பீல் வழக்குகளில் பல ஆண்டுகளாகப் பேரரசனுகத் திகழந்தார். ஈழத்திருநாட்டிலுள்ள சட்ட அறிக்கைகளில் அவருடைய பெயர் பல இடங்களில் காணப்படுகின்றன.

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் வலது கரமாகத் தமிழ்க் காங்கிரசிலிருந்து 1947-ம் ஆண்டு பாராளுமன்றம் சென்ருர், இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டபொழுது தமிழ்க்காங்கிரசிலிருந்து பிரிந்து தமிழரசுக் கட்சியை நிறுவினுர். இந்தியத் தமிழர்களுக்காகவே புதுக்கட்சியை ஆரம்பித்த பெருமை தந்தை செல்வாவைச்சாரும். ''இன்று இந்தியத்தமிழர்மீது விழும் அடி நாளை இலங்கைத் தமிழர் மீது விழலாம்'' என்று தூரதிருஷ்ட்டியுடன் கூறினுர்;

அரசியல் வாழ்வில் தந்தை செல்வாவின் வரலாறு கறைபடியாத வரலாருகும். தலைசிறந்த நியாயவாதியாகத் திகழ்ந்தவர் உழைத்த பணமெல்லாவற்றையும் தமிழ் பேசும் மக்களின் நலனுக்காகவே செலவிட்டார் எப்பொழுதும் சாதாரண வாழ்க்கை நடாத்தினுர். அண்மைக்காலம்வரை அவர்பழைய கார் ஒன்றை வைத்திருந்தது அவருடைய எளிய வாழ்க்கையை எடுத்துக்காட்டுகின்றது.

நிலமின்றேல் இனமில்லை என்பதற்கிணங்க தமிழ்பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த வடக்குகிழக்கு மாகாணங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று பாடுபட்டார். இந்த நோக்கும் பண்டாரநாயக்கா செல்வநாயம் ஒப்பந்தத்திலுள்ள பிரதேச சபைகளில் இடம் பெற்றது.

தேசிய அரசாங்கத்தில் காலஞ்சென்ற பிரதமர் டட்லி சேனநாயக்காவுடன் சேர்ந்த பொழு தமிழ்மொழிக்கு நியாயமானளவு உபயோகத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

## அரசியல் சாணக்கியர்

தந்தை செல்வா அரசியலில் ஒரு சாணக்கியர். தனது கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் பாடுபட்டு வந்தார். புதிய அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில்' தமிழ் அரசுக்கட்சி பங்குபற்றியமை அவருடைய அரசியல் சாணக்கியத்தைக் காட்டுகின்றது. தமிழ்பேசும் மக்களுக்கு பெறக்கூடிய உரிமைகளைப் பெறும் நோக்கத்துடன் அரசியல் நிருணய சபையில் பங்கு பற்றினுர். அரசியல் நிருணயசபை தமிழ் பேசும் மக்களின் விருப்பங்களுக்கு மாறுகச் செயல்பட்டவுடன் அதிலிருந்து வெளியேறினுர்.

அரசியலில் ஒரு தீர்க்கதரிசியாகவும் தந்தை விளங்கினுர். தமிழுக்கும் சிங்களத்திற்கும் சமஉரிமைக்குப் போராடிய கலாநிதி என். எம். பெரேரா கொள்கை மாறினுல்ஆச்சரியப்படமாட்டேன் என்று கூறியது வியக்கத்தக்கது. இப்பொழுது இலங்கைச் சமசமாஜக்கட்சி தமிழுக்கான சம உரிமைப் போராட்டத்தைக்கைவிட்டுள்ளது நினைவிருக்கலாம்.

அரசியலில் தந்தையின்செல்வாக்கு மற்றவர்கள் தாக்குப் பிடிக்கமுடியாத அளவிற்கு மேலோங்கி நின்றது. தந்தையை எதிர்த்தவர்கள் அரசியலில் செல்லாக்காசாகிவிட்டனர்.

## சாதிப்பிரச்னையில் தந்தை செல்வா

தமிழ்ச்சமுதாயத்திலே புரையோடிக்கிடக்கும் சாதிப் பிரச்னையைத் தீர்க்க அரும்பாடுபட்டார். மாவிட்டபுரத்தில் சிறுபான்மைத் தமிழர்களை ஆலயத்திற்குள் அனுமதிக்க அவர் பாடுபட்டதால் தேர்தலில் பல வாக்குகளை இழக்க நேரிட்டது. வல்வெட்டித்துறை அம்மன் கோயிற்கதவுகளைச் சிறுபான்மைத் தமிழர்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்று உருக்கமானவேண்டுகோளையும் விடுத்தார். மூதவையில் சிறுபான்மைத் தமிழருக்குப் பிரதிநிதித்துவம் பெற்றுக் கொடுத்தார்.

தந்தை செல்வா முஸ்லிம் உடன்பிறப்புக்களுக்கு இடுக்கண் நேர்ந்தபொழுதும் அவர்களுக்காகக் குரலெழுப்பத் தவறவில்லை. புத்தளத்தில் பல முஸ்லிம் உடன்பிறப்புகள் பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டிற்குப் பலியானதற்கு எதிராகக் குரல்கொடுத்தார். அவர் குரல்கொடுத்ததற்காக முஸ்லிம் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கலீல்அவர்கள் வவனியாவில நடைபெற்ற தந்தை செவ்வாவின் பிறந்ததினக் கொண்டாட்டத்தில் பங்குபற்றினுர். கிழக்கு மாகாணத்தில் பல முஸ்லிம் உடன்பிறப்புகள் பாராளுமன்றத்திற்கு செல்ல உதவினுர் செல்வா.

செல்வநாயகம் அவர்கள் தமிழ்பேசும்மக்களின் ஒற்றுமைக்காகவும் மேம்பாட்டுக்காகவும் உழைத்தார் தமிழ் பேசும்மக்களின் தலைவர்கள் விடுதலைப் போராட்டத்தில் போதிய விறுவிறுப்புக்காட்டவில்லையென்று துடிதுடிக்கும் இளைஞர்களும தந்தைமுன் பெட்டிப்பாம்பாக மாறுவார்கள். இதனுல் வயது வந்தவர்களையும் இளைஞர்களையும் கட்டுப்படுத்தி ஒரு கொடியின்கீழ் தலைமை தாங்கிச் சென்ருர். தமிழ்பேசும்மக்களின் ஒற்றுமையைச் சிதருமற் காப்பதே தந்தை செல்வாவுக்கு நாங்கள் செய்யும் கைமாருகும்.

---

1947-ல் இருந்து 1977வரை

# தந்தை செல்வாவின் அரசியல் வாழ்க்கை

1947ம் ஆண்டு இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் காங்கேசன் துறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ருர் செல்வா.

20-8-48லும், 10-12-48லும் பாராளுமன்றத்தில் இலங்கைக் குடியரசுச் சட்டம், இந்திய-பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது அச்சட்டங்களுக்கெதிராக வாக்களித்துக் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறினுர்.

1949ம் ஆண்டு மார்கழி மாதம் 18ந் திகதி மருதானையிலுள்ள அரசாங்க லிகிதர் சேவைக் கட்டடத்தில் தமிழரசுக்கட்சியை ஆரம்பித்து அதன் தலைவரானுர்.

1952ம் ஆண்டு தமிழரசுக் கட்சி வடக்குக் கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டது. செல்வா காங்கேசன்துறையில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார்.

## ஹர்த்தாலில்

1953 ஆகஸ்ட் 12ந் திகதி ஐக்கிய தேசியக்கட்சி அரிசி விலையை அதிகரித்ததை எதிர்த்து நாடு முழுவதும் நடைபெற்ற ஹர்த்தாலை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சிக்குத் தலைமை தாங்கி நடாத்தி வெற்றி பெறச் செய்தார்.

1954ல் சிங்களம் மட்டும் சட்டத்தை யு. என். பி. களனி மாநாட்டில் கொண்டு வந்த சேர் ஜோன் கொத்தலாவலை யாழ்நகர் வந்தபோது அவரை எதிர்த்து யாழ் மாநகரசபை மண்டபத்தின் முன் தமிழரசு வாலிப முன்னணி கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டஞ்செய்ய ஆவன ஆற்றினுர்.

1956 மாசி 20ந் திகதி சிங்களம் மட்டும் கொள்கைக்கு எதிராக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் முதலாவது ஹர்த்தாலை நடாத்தினுர்.

1956 சித்திரை 10ல் நடநத பொதுத் தேர்தலில் 14 அபேட்சகர்களை நிறுத்தி 10 இடங்களில் வெற்றிபெறச் செய்தார். இதன் மூலம் தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவராகச் செல்வா விளங்கினுர்.

## காலிமுகத் திடலில்

1956 ஜூன் 5ந் திகதி சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராகக் கொழும்பு காலிமுகத் திடலில் முதலாவது சத்தியாக்கிரகப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினுர்.

1956 ஆகஸ்ட் மாதத்தில் 17, 18, 19ந் திகதிகளில் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து பாதயாத்திரை ஏற்படுத்திப் பிரசித்தி பெற்ற திருமலைத் தீர்மானத்தைக் கொண்டுவர உழைத்தார்.

1957 ஜனவரி 19ந் திகதி சிங்கள ஸ்ரீ எதிர்ப்புச் சட்ட மறுப்புப் போராட்டத்தை யாழ். முற்றவெளியில் ஆரம்பித்து வைத்தார்.

1957 ஜூலை 26ல் பிரசித்தி பெற்ற பண்டா செல்வா ஒப்பந்தத்தை உருவாக்கித் தமிழ்ப் பகுதிகளுக்கு மாநில சுயாட்சியுள்ள பிரதேச சபைகளை உருவாக்குவதற்கு முன்னின்ருர்.

## மனம் மிக வருந்தினுர்

1957 பெப்ரவரி 4ந் திகதி சுதந்திரதினத்தைக் துக்கதினமாக அனுஷ்டித்தபோது திருமலை மணிக்கூட்டுக் கோபுரத்தில் கறுப்புக் கொடியைப் பறக்கவிட்ட நடராசன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர். தமிழரசுத் தந்தையின் அறப் போராட்டக் காலகட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த முதல் தமிழ்மகன் நடராசன் நிலை குறித்து மனம் மிக வருந்தினுர்.

1958 மே 24ல் வவுனியாவில் கூடிய தமிழரசு மாநாடு மீண்டும் அரசின் மீது போர்ப் பிரகடனம் செய்தது. இதனுல் தென்னிலங்கையில் இனக் கலவரம் வெடித்தது.

## தடுப்புக்காவலில்

1958 ஜூன் 5ல் செல்வா தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதுடன் தமிழரசுக்கட்சியும் அவரது சொந்தப் பத்திரிகையான சுதந்திரனும் தடை செய்யப்பட்டன.

1960 ஏப்ரலிலும் ஜூலையிலும் இரு பொதுத் தேர்தல் தல்களை ஏற்படுத்தத் தமிழரசுக்கட்சியே காரணமாக இருந்தது.

1960 மே மாதம் தமிழ்மக்களுக்கு உரிமை வழங்க மறுத்த டட்லி அரசாங்கத்தை தமிழரசுக்கட்சி வீழ்த்தி, மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை உண்டாக்கியது. இவ்விரு தேர்தல்களிலும் தமிழரசுக்கட்சியே தமிழினத்தின் பெரும்பான்மைக் கட்சியாகத் தெரிவுசெய்யப்பட்டது. செல்வா தனிப் பெருந் தலைவரானுர்.

20-2 61ல் அரசாங்கஅலுவலகங்களில் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. யாழ். கச்சேரிச் சத்தியாக்கிரகத்தை செல்வா தலைமை தாங்கி நடாத்தினுர்.

16-3-61ல் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருக்கும்போது செல்வாவின் தாயார் திருமதி கரியற் அன்னம்மா வேலுப்பிள்ளை காலமானுர்.

17-4-61ல் செல்வா தடுப்புக்காவல் கைதியானுர். முதலில் பாணுகொடை இராணுவ முகாமிலும், பின்னர் நோய்வாய்ப்படவே தமது வீட்டிலும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

15-7-61ல் தடுப்புக் காவலில் இருந்தபோது சத்திர சிகிச்சையின் பொருட்டு இங்கிலாந்து பயணமானுர்.

1965 மார்ச் தேர்தலில் தமிழரசுக்கட்சி செல்வா தலைமையில் பெருவெற்றியீட்டியது. ஐ. தே. கட்சியும் சுதந்திரக்கட்சியும் செல்வாவின் துணையை நாடின. செல்வா ஐ. தே. கட்சியை ஆதரித்து தேசிய அரசாங்கத்தை நிறுவ உதவினுர். கட்சியின் கட்டளையை ஏற்று மந்திரிப்பதவி எதையும் தொடாது சாதாரண எம். பி. யாகவே இருந்தார்.

1970 மே 27-ம் திகதி நடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி 13 பிரதிநிதிகளுடன் பாராளுமன்றம்சென்றது.

## தமிழர் கூட்டணித் தலைவரானுர்

1972 மே 14-ம் திகதி திருகோணமலையில் உருவாகிய தமிழர் கூட்டணியின் தலைவராக செல்வா தெரிவானுர்.

1972 மே 22-ம் திகதி புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து தமிழ் ஈழமெங்கும் 3 நாள் ஹர்த்தால் பாடசாலை பகிஷ்கரிப்பு நடைபெற்றது.

1972 அக்டோபர் 2-ந் திகதி தபால் சட்டத்தை மீறி முத்திரைப் போராட்டம், உண்ணுவிரதத்தில் தந்தை கலந்துகொண்டார்.

1973 ஏப்ரல் 6-ம் திகதி புத்தூரில் தமிழர் கூட்டணியின் சட்டமறுப்புப் பாடசாலை நிறுவப்பட்டது.

## தமிழ் ஈழப் பிரகடனம்

1973 செப்டம்பர் 7-ம் திகதி மல்லாகத்தில் கூடிய தமிழரசுக்கட்சி தமிழரசுக்கட்சியின் இலட்சியம தமிழ் ஈழத்துக்குத தன்னுட்சி பெறுவது என்று தந்தை செல்வா முன் பிரகடனப்படுத்தியது.

புதிய அரசியல் சட்டத்திற்குச்சவால்விட்டு 3-10-72ல் செல்வா பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜிஞமாச் செய்தார்.

6-2-72ல் நடைபெற்ற இடைத்தேர்தலில் 16,470 மேலதிக வாக்குகளினுல் செல்வா வெற்றிபெற்ருர்.

19-9-75ல் செல்வாவின் இல்லத்தில் கூடிய தமிழர் கூட்டணியினர் தேசிய அரசுப் பேரவையில் தனிநாடு தீர்மானம் கொண்டுவருவதாகத் தீர்மானித்தனர்.

4-2-76ல் தமிழ் ஈழத் தீர்மான நாள் தமிழ்ப்பிரதேசங்களில் உதய சூரியன் கொடியுயர்த்திக் கொண்டாடப்பட்டது.

தமிழ்மக்களின் நம்பிக்கைப் பேரொளியாய் விளங்கிய மூதறிஞர் செல்வா 23-3-77 அன்று காலை 9 மணிக்குத் தெல்லிப்பழையிலுள்ள தமது இல்லத்தில் தடுக்கி வீழ்ந்து தலையில் காயம்ஏற்படவே அன்று மாலை 4-30 மணிக்கு யாழ். அரசினர் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டார்.

26-4-77 அன்று இரவு 9 மணிக்கு 35 லட்சம் தமிழ் மக்களின் மாபெரும் தலைவர் அமரரானுர்.

புத்தொளி

---

# இளைஞர்க்கு உன்பிரிவு இடியாய் விழுந்ததையா

ஈழத்தமிழர் இதயப் பேரிகையே!
வாழத்துடிக்கும் வண்டமிழர் ஒளிவிளக்கே!!
சாலச்சிறந்த தமிழர் பெருந்தலைவா!!!

உந்தன்பிரிவறிந்து உள்ளம் அழுகிறது
எந்தன் இனமும் என்நாடும் துடிக்கிறது
வெந்தமனங்கள் வேதனையால் விம்மிறது

அரசியலில்அறங்காத்து ஆண்மைத் தமிழ்ப்பண்பின்
முரசறைந்துஅகிம்சைநெறி முற்றும் கைப்பிடித்து
அரசுரிமைகேட்டுநின்றஅத்துணிவைக் காண்பதெப்போ

அடியா?உதையா? அடக்குமுறை நச்சரிப்பா?
மிடியா?பகையா? மீண்டும் சிறைக்கதவா?
நிறைவாகஏற்று நீகொள்கைக் காகநின்ருய்

அணியைத்திரட்டி அறப்போர்க்கு முரசறைந்து
துணிவைஇளைஞர்களிற் தூண்டிவிட்டு உன்பெரிய
பணியும் முடிந்ததென்ரு பறந்துசென்ருய் பண்பாளா?

துடியாய்த்துடித்து(த்)தூயஉன் கொள்கைகளைப்
பிடியாய்ப்பிடித்த பேரிளைஞர்க் குன்பிரிவு
இடியாய்விழுந்ததையாஎங்கேஇனிக்காண்போம்

—நயினை சண்முகநாதன்

மூதறிஞர்மறைவையொட்டி

# யாழ். வளாகப் பரீட்சைகள் பின்போடப்பட்டன

யாழ்ப்பாணம், வெள்ளி

மூதறிஞரின் மறைவையொட்டி யாழ். வளாகத் திருநெல்வேலிப் பிரிவில் எவ்வித விரிவுரைகளும் நடைபெறவில்லை. வளாக மாணவர் மன்றத் தலைவர் திரு. வ. ஐ. ச. ஜெயபாலன் மாணவர் சங்க சார்பில் நிர்வாகத்துடன் பேசியதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நடைபெறவிருந்த சகல வருடாந்தப் பரீட்சைகளும் பின்போடப்பட்டதுடன் அங்கு அஞ்சலிக்கூட்டம் நடத்தவும் அழுமதிக்கப்பட்டது. திரு. நா. தர்மராஜா தலைமையில் வளாக மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் இனமத வேறுபாடின்றிச்சகலமாணவர்களும் கலந்துகொண்டு மூதறிஞர் செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தினர். பௌத்த, இஸ்லாமிய, கத்தோலிக்க, இந்து மதத்தைச் சேர்ந்த சகல மாணவர்களும் விரிவுரையாளர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதைத் தொடர்ந்து வளாக மாணவ மாணவிகள் ஊர்வலமாகப் புறப்பட்டுக் கூட்டணிக் காரியாலயம் சென்று அங்கு மூதறிஞரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

வளாகத் தமிழ் மன்றத் தலைவர் நா. தர்மராஜா தலைமையில் சிங்கள மாணவ, மாணவிகள் உட்பட சுமார் 500 மாணவர்கள் கைகளில் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் சுலோகங்களைக் கோஷித்துக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர்.

வளாகத் தமிழ்மன்றம் மூதறிஞரின் பிரிவு குறித்து இரங்கற் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

'எந்தையே எம்தலைவா எமைவிட்டு ஏன் சென்ருய்! கண்ணீர் அருவியிலே கரையறியாத்தோணியென அண்ணலே எங்களினம் அவதியுறல் காணுயோ' என்று தமிழ் மன்றத்துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. (கா-அ)

## இலவசம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியிலுள்ளநியு வசந்தா பிறிண்டிங் ரெக்ஸ்ரைல் நிறுவனம் தந்தை செல்வாவின்மூவர்ணப் படத்தை துணி கொடுப்பவர்களுக்கு இலவசமாக அச்சடித்துக் கொடுக்கிறது. (இ)

## காசிஆனந்தன் அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி

கவிஞர் காசிஆனந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் கல்குடாஅபேட்சகர் திரு. இ. சம்பந்தமூர்த்தி, பட்டிருப்பு அமைப்பாளர் திரு. மு. கணேசலிங்கம் ஆகியோர் நேற்று அதிகாலை 2 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து மூதறிஞரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இவர்களுடன் மட்டக்களப்பு கூட்டணிப் பிரமுகர்களான திருவாளர்கள் அ. அம்பலவாணர், ஈஸ்வரன், தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த இ. தவராசா ஆகியோரும் மட்டக்களப்பிலிருந்து வந்து அஞ்சலி செலுத்தினர்.

## காசியும் அமைச்சர்களும்

யாழ்ப்பாணம், வெள்ளி

மட்டுநகர் எம்.பி. திரு. இராசதுரையம், கவிஞர் காசி ஆனந்தனும் அமர்ந்திருந்தபோது போக்குவரத்து அமைச்சர் திரு.கே.பி. இரத்னயக்கா வந்து திரு இராசதுரைக்கு வணக்கம் தெரிவித்தபோது அருகில் நின்ற ஒருவர் கவிஞர் காசியை சுட்டிக்காட்டி இவர் தான்'காசி' என்று அறிமுகப்படுத்தினர். அமைச்சர் இரத்தினயக்கா, காசிக்கு வணக்கம் தெரிவித்தபோது கவிஞர் காசியும் வணக்கம் தெரிவித்தார்.

இதன்பின் தபால் வீடமைப்புதுறை அமைச்சர் திரு. குமாரசூரியரும் வந்து,முதலில் திரு. இராசதுரைக்கும்.பின்னர் கவிஞர் காசி ஆனந்தனுக்கும் வணக்கம் தெரிவித்தார்.

அமைச்சர்கள் ஒவ்வொருவரும் மூதறிஞர் செல்வாவின் புதல்வர் திரு.சந்திரகாசனுக்கு கைகுலுக்கி துக்கத்தை தெரிவித்துக் கொண்டனர்.(க)

# தாயார் ஏசினராம் இளம்பெண் தற்கொலை

யாழ்ப்பாணம், வெள்ளி

தாயாருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக வாழ்வை வெறுத்த இளம் யுவதி ஒருவர் நஞ்சிடம் தஞ்சமடைந்தார்.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் நடந்தது.(அப்புத்துரை பமேலாதேவி (வயது19)என்ற இவ் விளம்பெண் சம்பவதினத்திற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே முகத்தை உம் என்று வைத்துக் கொண்டிருந்ததாயும் இதனல் ஆத்திரம் கொண்டதாயார் ஏன் இப்படி இருக்கிறீர் என்று ஏசியதாகவும் பின்னர்குளிக்கச் சென்றபோது தாயார் கோபமாக ஏசியதாகவும் அப்போது தாயாரிடம் உனக்கு செய்து காட்டுகின்றேன்பார் என்று கூறியவாறு வீட்டுக்குள் சென்று தாழிட்டுக் கொண்டு வீட்டிலிருந்த நஞ்சு திராவகத்தை கரைத்துக் குடித்துவிட்டு வெளியே வந்து தாயாரிடம் மருந்து குடித்துவிட்டேன் என்று கூறியதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட இப்பெண் அங்கு மரணமானர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ்.பிரான்சிஸ் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (கா)

...

## "இந்தியா திரும்புவோருக்கு இவ்வுதவிதேவை"

கொழும்பு,வியாழன்

"இந்தியா திரும்புவோர் புனர்வாழ்வு அலுவலகத்திற்கு வருவதற்கு முன்னரே எவ்வாறன உதவிகளை அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனதீர்மானிக்கக் கூடியதாக வேலைவாய்ப்புதொழில்வாய்ப்பு ஆகிய விரபங்கள் தாயகம் திரும்புவோர்கள் அறிந்து கொள்ளக் கூடியதான ஏற்பாடுகளை செய்துதவுங்கள்".

இவ்வாறு இந்தியா சென்று 'புனர்வாழ்வு' நிலையங்களைக் கண்டறிந்து வந்த இ.தொ. கழக ராகலை மாவட்டச் செயலாளர் திரு'எம். ஆர். கே. காளிமுத்து கண்டியிலுள்ள இந்திய தூதரகப் புனர்வாழ்வு அதிகாரியைக் கடிதமூலம் கேட்டுள்ளார்.

புனர்வாழ்வு அதிகாரி திரு. சுந்தராஜுவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் "தாயகம் திரும்புவோர்கள் தங்கள் சுற்றத்தார்கள் உறவினர்கள் ஆகியோருடன் சேர்ந்து ஒரே இடத்தில் வாழவே விரும்புகின்றனர். ஆனல் புனர்வாழ்வில் அவர்கள் வேறு வேறு தொழில்களும் இடங்களும் கிடைக்கின்றபடியால் அவர்கள் திட்டமிட்ட முறையில் செயல்படமுடியாது பேய்விடுகின்றது" என்று தெரிவித்துள்ளார். (அ)

# கொள்கை, இலட்சியத்துக்கு விசுவாசத்துடனுழைத்தவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

'அமரர் செல்வநாயகம் தாம் கொண்ட கொள்கைக்கும் லட்சியத்திற்கும் மிக விசுவாசத்துடனும் கண்ணியத்துடனும் உழைத்தார்.'

இலங்கை சமசமாஜக்கட்சியின் வடபிரதேச வாலிப சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் திரு. செ.அருளம்பலம் வெளியிட்ட இரங்கற் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;-

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவு மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் குறிப்பாகப் பொதுத்தேர்தலை நாடு எதிர்நோக்கியிருக்கும் தறுவாயில் சம்பவித்தது துர் அதிர்ஷ்டவசமானது.

இங்கு வாழும் தேசிய சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு எதிராகக் குரல்கொடுத்து பிரச்னை இருப்பதாகச் சகலரும் உணர்ந்துகொள்ளவைத்தது திரு. செல்வநாயகமே. அப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு அவர் அணுகிய முறைகளும் காட்டிய வழிகளும் எம்மால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. இருந்தபோதிலும் அவர் கொண்ட கொள்கைக்கு நேர்மையாக உழைத்ததை மறந்துவிடுவதற்கில்லை.

நேர்மையும் கட்டுப்பாடும் பிறர்நோகப் பேசாத பண்பும் கொண்ட தலைவரை இழந்து நிற்கும் கட்சியினருக்கும் இளைஞர்பேரவைத்தோழர்களுக்கும் வடபிரதேச சமசமாஜ வாலிபர் சம்மேளனம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. (க)

நெற்பயிரைப் பாதிக்கும் எல்லாப் பூச்சிப் புழுக்களையும் கட்டுப்படுத்த







நெற்பயிரில் சந்துக்குத்தி, இலை அரிப்புழுக்கள், மூட்டுப்பூச்சி தத்துக்கிளி உட்பட மற்றும் பூச்சிப்புழுக்களையும் கத்தரிக்காய் புடோல் பிக்கு மா, தோடை உட்பட மற்றும் பயிர்களையும் தாக்கும் பூச்சிப்புழுக்களைக் கட்டுப்படுத்த லெபேசிட் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது
தயாரித்து விநியோகிப்போர்
ஹேகெம லிமிட்டெட,
400 டீனஸ் ரோட கொழும்பு 10
தபால் பெட்டி 70 டெலிபோன் 93563 96331

வீதி விபத்தில் சிக்கியோருக்கு

# நஷ்டஈடு வழங்குவதில் புதிய திட்டம்

கொழும்பு, வியா.

வீதி விபத்தில் பாதிக்கப்படுவோருக்கு காப்புறுதி கூட்டுத்தாபனம் நஷ்டஈடு வழங்குவதில் புதிய திட்டம் ஒன்றினை மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுல்நடத்தவிருக்கிறது.

இதுவரை காலமும் வீதி விபத்துக்களில் வாகனச்சாரதி குற்றவாளியாகக் காணப்பட்டால் மட்டுமே பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டுவந்தது. இனிமேல் குற்றம் யார்பக்கம் இருந்தாலும் விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நஷ்டஈடு வழங்கும்.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஆண்டுதோறும் 700 பேர் வீதிவிபத்துக்களில் மரணமாகிறர்கள், 1000 பேர் காயமடைகிறர்கள். (உ)

## "மாபெரும் இழப்பு"

அரியாலை, வியா

ஈழத்துக் காந்தியும், தமிழர் கூட்டணித் தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து அரியாலை மேற்கு வாலிபர்கள் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர்.

அத் துண்டுப்பிரசுரத்தில் தமிழர் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்து உழைத்த மாபெரும் தலைவரின் மறைவு தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பாகும் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

......

## நாளை சனி சந்தை இல்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

அலுப்பாந்தியில் அண்மையில் யாழ். அரசாங்க அதிபரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சனிவார மலிவுசந்தை இவ்வாரம் நடைபெறுதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.தந்தை செல்வாவின் மறைவு காரணமாக நாளை சனிக்கிழமை இச்சந்தை திறக்கப்படமாட்டாதென்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

ராஜா
(யாழ். நகர்)
எஸ். எஸ்.ஆர். - ரங்கராவ்
விஜயகுமாரி
[தினசரி 4 காட்சிகள்]
குமுதம்

12-வது வெற்றி வாரம்!
மனோகரா
(யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL
(JAFFNA)
ஜனத்திரள் நிறைந்த 2-வது வாரம்
Daily at 4-45,7-00&9-30p.m. only
அதிசயம்! ஆனல் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறுர்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறுர்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)

வெலிங்டன்
(யாழ். நகர்)
முத்துராமன் ஃ சுஜாதா
நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693
(யாழ். நகர்)
விஜயகுமார் — லதா
நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

RIO
Grand Release
Entering Jaffna with Hilarious Comedy
LAUGH - LAUGH - LAUGH
HOLIDAY ON THE BUSES
We guarantee, you will have a really hot time.

மகத்தான 55-வது நாள்
ஶ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி (இருவேடம்)
ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

தமிழினத்தின் தேச பிதா
அமரர் செல்வா அவர்களுக்கு
இறுதி அஞ்சலி செலுத்துமுகமாக
அன்னரது இறுதியாத்திரை முடியும் வரை
படக்காட்சிகள் காண்பிக்கப்படமாட்டா.
சனிக்கிழமை பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டதும்
"நாளை நமதே"
வண்ணப்படம் திரையிடப்படும்.
—'ராணி சினிமா'
யாழ். நகர்.

# தன்னாட்சி அமைப்பதே நாம் செய்யும் அஞ்சலி!

— ராஜதுரை எம். பி.

யாழ்ப்பாணம், வெள்ளி

''நாம் அனைவரும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு தன்னாட்சியை அமைப்பதே மறைந்த பெருந்தலைவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்''.

இவ்வாறு முதறிஞர் தந்தை செல்வநாயகத்தின் மறைவு குறித்து மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராஜதுரை விடுத்த அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''தமிழ்பேசும் இனத்தின்நம்பிக்கை நட்சத்திரம் வீழ்ந்தது. தமிழ்பேசும் இனம் தன்னாட்சி பெற்று வாழவேண்டும் எனக் கனவு கண்ட ஒப்பாரும் மிக்காரும் மற்ற தலைவர்; ஒவ்வொரு தமிழ்பேசும் மகனும் தன் தந்தை என்று அன்பு கொண்டு அழைத்த அருந்தலைவர் மறைந்துவிட்டார்.

''இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த மாபெரும் சக்தி தலைவர் தந்தை செல்வநாயகம். அவர் இந்த நாட்டில் தமிழினம் தனி இனமாக, வேற்றுமை மறந்து தன்னாட்சி கொண்ட தமிழ் ஈழம் அமைக்க வேண்டும் எனக் கனவு கண்டார்.

''அவர் கனவை நனவாக்க நாம் வேற்றுமைகளை மறந்து நாம் கொண்ட இலட்சியத்திற்காக உழைப்போம் என்று உறுதி பூணுவதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியும் நன்றிக்கடனுமாகும்'' (கா-இ)

## ஒற்றைஆட்சி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டமாக்கியவரும் கூட்டாட்சி அமைப்பே இந்நாட்டுத் தமிழர் இன்றைய நிலையில் உரிமைபெற்று வாழத் தகுந்த அரசியல் அமைப்பென்பதை முதன்முதலில் உணர்ந்தவரும் திரு. செல்வநாயகமே ஆவார்.

''சத்தமிடும் சக்தியாகவிளங்கிய பொன்னம்பலத்தின் பின் அமைதியான சக்தியாகவிளங்கிய செல்வநாயகம் தனக்குரிய வாரிசாக அமிர்தலிங்கத்தைத் தமிழினத்துக்கு தந்துவிட்டுப் போயுள்ளார்.

''அமரரின் வாழ்வு மாத்திரமல்ல, அவரின் மரணமும் சக்தி வாய்ந்ததே. அந்தச் சக்தி தமிழ் விடுதலைப் போராட்டமாக வீறுகொண்டு எழட்டும். கூட்டாட்சியாக மலரட்டும்''.

## மலர்ப்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கொண்டிருக்கிறது.

### மக்கள் அன்பின் வெளிப்பாடாக...

தமிழ் மக்கள் தங்கள் தலைவன் மேல் எத்தகைய அன்பையும் அபிமானத்தையும் கொண்டிருக்கிறுர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பார்க்கும் இடமெல்லாம் தமிழரசுக் கொடிகளும், கறுப்புக்கொடிகளும், உதயசூரியன் கொடிகளும் அசைந்தாடுகின்றன. வீதிமருங்கெல்லாம் அகிம்சாமூர்த்தியின் அன்பு உருவினை ஒட்டுவதில் மக்கள் போட்டியிடுகின்றனர். தலைவனின் உருவைத்தாங்கிய துண்டுப் பிரசுரங்கள் வெளிவருவது யாழ்நகரில் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

### மாணவ மாணவிகள் அஞ்சலி

பஸ்களிலும் கால் நடையாகவும் வரும் மாணவ மாணவிகள் மலர்வளையங்களைச் சார்த்தியும் மலர்களைத் தூவியும் தலைவருக்கு அஞ்சலி செலுத்தினர். கைகளிலே கறுப்புக் கொடிகளைப் பிடித்த வண்ணம் மாணவமாணவிகள் அணிஅணியாக வந்த வண்ணம் உள்ளனர். (க-அ)

வெஸ்லி
[மாவிட்டபுரம்]
தினசரி 6-30, 9-30
சனிஞாயிறு 2-30
சிவாஜி-பானுமதி
அம்பிகாபதி

# ஜே. ஆர். இன்று—

(1ம் பக்க தொடர்ச்சி)

### எம். ஜி. ஆர். நாளை வரலாம்

அ. இ. அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் ம. தி. மு. க. பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் ஆகியோர் நாளை சனிக்கிழமை யாழ். வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர்டாக்டர் இரா. ஜனார்த்தனம் இங்கு வர முயற்சித்தபோதிலும் அவர் விண்ணப்பம் மறுக்கப்பட்டுள்ளது. அவர் வரமாட்டார்.

### விசேஷ விமான சேவை

ஏர் சிலோன், விசேஷ விமானச் சேவையொன்றை நாளை நடத்தும். கொழும்பிலிருந்து நாளை பகல் 12-30 க்கு விமானம் புறப்பட்டு பலாலி வந்து சேரும். இந்த விமானம் மாலை 7-30 க்கு கொழும்பு திரும்பிவிடும்.

### நினைவாலயம்

மறைந்த தலைவர் செல்வாவுக்கு நினைவாலயம் எழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திரு. கு. நேசையா தலைமையில் ஒரு நிதிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

### இன்று வரும் தலைவர்கள்

ஐக்கியதேசியக்கட்சி தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மூதறிஞர் செல்வாவிற்கு இன்று காலை 9 மணிக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தவிருக்கிறுர். இவருடன் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. காமினி திஸநாயக்காவும் வந்து அஞ்சலி செலுத்துவார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், திரு. காமினி திஸநாயக்காவும் இன்று காலை 5 மணிக்கு மெயில் வண்டியில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடைவார்கள். இன்று மாலையே அவர்கள் கொழும்பு திரும்புவார்கள்.

### 'சிவா' நாளை வருகிறுர்

கொழும்பில் சுகவீனமுற்றிருக்கும் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்தைப் பிரயாணம்செய்யக் கூடாது என்றுடாக்டர்ஆலோசனை கூறியிருக்கிறுர். ஆனலும் மூதறிஞர் செல்வாவிற்கு இறுதி அஞ்சலியை செலுத்த வேண்டும் என விரும்பும் அவர் டாக்டர் ஆலோசனையை யுல் மீறி நாளை இங்கு வந்து இறுதி அஞ்சலியை செலுத்துவார்.

தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ரி. சிவசிதம்பரம் நேற்று மாலை வந்து அஞ்சலி செலுத்தினர். தமிழ்க் காங்கிரஸ் சார்பில் மிகப் பெரிய மலர்வளையம் ஒன்றை காங்கிரஸ் சார்பாக செயலாளர் திரு. தா. சங்கரப்பிள்ளை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-சாவித்திரி
வேட்டைக்காரன்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி ஞாயிறு 10-30
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
என் கடமை

## அச்சுப் பிழை

தந்தை செல்வாவின் மரணம் குறித்து அமைச்சர் குமாரசூரியர் விடுத்திருந்த இரங்கற் செய்தியில் ஓர் இடத்தில் ''ஆயிரம் பிழைகளை தன்வாழ்வில் கண்ட ஒருவனே......'' என்றிருப்பது தவருகும் ''ஆயிரம் பிறைகளைத்தன் வாழ்வில் கண்ட ஒருவனே......'' என்று இருத்தல் வேண்டும். நினையாப்பிரகாரமாக ஏற்பட்ட இவ்வச்சுப்பிழைக்காக வருந்துகின்றோம்' (ஆ-ர்)

## பிரதமர்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

யோரும், அமைச்சர் இரத்னாயக்காவுடன்கதைத்துக்கொண்டிருந்தனர்.

### பிரதமருக்கு கோரிக்கை

துரையப்பா வழக்கில் எதிரிகளாக உள்ள 7 இளைஞர்களையும், தந்தை செல்வாவை இறுதியாக பார்க்க அனுமதிவழங்குமாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், பிரதமரிடம் கேட்டார், 'இது என்னைப் பொறுத்த விஷயமானல், அனுமதி வழங்குவதில் தடையிருக்காதுஎன்றும் ஆனல்இதில் மேல் நீதிமன்றம் தான் அனுமதிவழங்கவேண்டும்' எனறும் பிரதமர்பதிலளித்தார். இது தொடர்பான மகஜர் ஒன்று அமைச்சர் கே. பி. இரத்னாயக்கா மூலம் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

## சாரணருக்கு கோரிக்கை

தந்தை செல்வாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறும் இறுதியாத்திரையின் போது ஊர்வலம் சிறப்புடன் நடைபெற, அவ்வப்பகுதியிலுள்ள சாரணர்களும் சாரணத் தலைவர்களும் சீருடையில் சென்று சேவையில் ஈடுபடுமாறும் யாழ். மாவட்ட ஆணையாளர் திரு. சி. காந்தமூர்த்தி கேட்டுள்ளார்.

## தவறணைகள் மூடப்படும்!

வடபகுதியிலுள்ள கூட்டுறவு கள்ளுத் தவறணைகள் யாவும் நாளை சனிக்கிழமை மூடப்படும், இதற்கான அனுமதியை யாழ். அரசாங்க அதிபர் விடுத்துள்ளார்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ∴ உஷா நந்தினி
(இரு வேடங்களில்)
∴ சௌகார் ஜானகி, ∴ சுகுமாரி நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

ஈழநாடு
The EELANADU

## இன்று பாடசாலைகள் இல்லை

யாழ்ப்பாணம், வெள்ளி தந்தை செல்வாவின் மறைவை யொட்டி இன்று வடபகுதி பாடசாலைகள்யாவும் மூடப்பட்டிருக்கும். செல்வாவுக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் அஞ்சலிசெலுத்தும் பொருட்டுப் பாடசாலைகளை இன்று மூடுவதற்கு அனுமதியளித்துள்ளது. கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதனுடன் தொடர்புகொண்டு பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை வழங்குமாறு கேட்டதைத் தொடர்ந்து, திரு. சிவநாதன் கல்வி அமைச்சருடன் தொடர்புகொண்டதையடுத்து இன்று பாடசாலை மூடுவதற்கு அமைச்சர் அனுமதியளித்ததாகவும் தெரிகிறது. (அ)



மூதறிஞர் செல்வாவுக்கு பிரதமரும் அமைச்சர்களும் அஞ்சலி செலுத்துவதை முதல் படத்திலும், யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபாலா, மேதிலக அரசாங்க அதிபர் ஏ. ஏ. யோசேப் அஞ்சலி செலுத்துதை இரண்டாவது படத்திலும் திருமதி செல்வநாயகத்துடன் பிரதமர் துக்கம் விசாரிப்பதை மூன்றுவது படத்திலும் காணலாம்.
(படம்: பிரபா போட்டோ 'தேவா')

## சபாநாயகர், அமைச்சர்கள் பிரதமர், அஞ்சலி செலுத்தினர்

**பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், மற்றும் அமைச்சர்களும் நேற்றுக் காலை 9-30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு வந்து மூதறிஞர் செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தினர்கள்.**

திருமதி செல்வநாயகத்திற்கு அருகில் பிரதமர் அமர்ந்து துக்கம் விசாரித்த பின், "திரு. செல்வநாயகம் மிகவும் இளமையாகக்காணப் படுகிறரே" என்று கேட்டார். இதற்குப் பதிலளித்த திருமதி செல்வநாயகம் "மூளையில் இரத்தம் கட்டிபட்டிருந்ததினல் வயோதிபராகத் தோற்றமளித்தாரென்றும் ஆஸ்பத்திரியில் மிகவும் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு வந்ததால் இளம் தோற்றத்துடன் காணப்படுவதாகவும் கூறினர். மகள் எப்போது வருகிறர் என்று பிரதமர் கேட்டபோது 'நாளை வருகிறர்' என திருமதி செல்வநாயகம் பதிலளித்தார்.

### வந்திருந்த அமைச்சர்கள்

பிரதமருடன் சபாநாயகர் திரு. ஸ்ரான்லி இலகரத்ன, கூட்டுறவு, நிதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியூதீன்மஹ்மூத், பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின, தபால், வீடமைப்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர், நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் திரு. மைத்திரிபாலசேனநாயக்கா, போக்குவரத்து அமைச்சர் திரு. கே. பி. இரத்னயக்கா ஆகியோர் வந்திருந்தனர். உதவி பிராந்திய பொலிஸ் அதிபர் திரு. அனேசெனிவரத்தினவும் வந்திருந்தனர்.

### வெண்ணிற ஆடையில்

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா வெள்ளைச் சட்டையும் வெள்ளைச் சாறியும் அணிந்திருந்தார்.

பிரதமரும் அமைச்சர்களும் வருவதற்கு முன்னரே வீரசிங்கம் மண்டபம் நிரம்பி வழிந்துவிட்டது. வெளியிலும் ஏராளமான மக்கள் திரண்டு நின்றனர்.

அதேசமயம் வெய்யிலையும் பாராமல், சாதாரண விவசாய தொழிலாளி மக்கள், மாணவர்கள், இளைஞர்கள் 'கியூ' வில் நின்று அமைதியாக வந்து அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தனர்.

### அமிரும் நவமும் வரவேற்றனர்

வீரசிங்கம் மண்டப வாசலில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல்அதிபர் திரு. ஏ.அமிர்தலிங்கமும், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும் பிரதமரையும் அமைச்சர்களையும் வரவேற்று மூதறிஞர் செல்வாவின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த மலர்ப் பந்தலுக்கு அழைத்துச் சென்றனர்.

### உதயசூரியன்கொடி; காந்திக்குல்லா

வெள்ளைத் துணிகளில் உருவாக்கப்பட்ட மலர்ப்பந்தலில் உதயசூரியன் கொடிக்குக் கீழே வேலைப்பாடமைந்து உதயசூரியன் கொடிகளால் சுற்றிவளைக்கப்பட்டிருந்த மேடையில் காந்திக்குல்லாவும், உதயசூரியன் சால்வையும் அணிந்தபடி, இளந்தோற்றத்துடனு தந்தை செல்வாவின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது.

பிரதமர் முதலில் வந்து மௌனமாக நின்று அஞ்சலி செலுத்தினர். அதன் பின் அமைச்சர்களும் வந்து அஞ்சலி செலுத்தியபின் இடதுபக்கத்தில் உள்ள ஆசனங்களில் அமர்ந்தனர்.

### பக்திகீதங்கள் இசைத்தனர்

இதேசமயம் மேடையில் ஆண்களும் பெண்களும் பக்திப்பாடல்கள் இசைத்துக் கொண்டிருந்தனர். கீழேஉள்ள ஆசனங்களில் எம். பிக்களும், இளைஞர்பேரவையினரும், சட்டத்தரணிகளும். உள்ளூராட்சித் தலைவர்களும் அமர்ந்திருந்தனர்.

வலதுபக்கத்தில் மூதறிஞர் செல்வாவிற்கு அருகில் உள்ள மூதறிஞர் செல்வாவின் சகோதரர் திரு. ஈ. வி. பொன்னுத்துரை, திருமதி செல்வநாயகம், திருமதி கனகசுந்தரம், திருமதி சந்திரகாசன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மாதர் பேரவையைச் சேர்ந்த செல்வி அம்பலம், திருமதி அ. இராசபூபதி ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

### திருமதி அமிரும் பிரதமரும்

பிரதமர், திருமதிசெல்வநாயகத்துடன் கதைத்தபின்எழுந்து வணக்கம் தெரிவித்தபின் திருமதிசந்திரகாசனுக்கும், திருமதி மங்கையர்க்கரசிக்கும், வணக்கம்தெரிவித்தபின்னர், எதிர்ப் பக்கத்திலுள்ள ஆசனத்தில் போய் அமர்ந்துகொண்டார்.

### பரஸ்பர உரையாடல்

மேடையின் வலதுபக்கத்தில் மட்டுநகர் எம். பி. திரு. செ. இராசதுரையும், கவிஞர் காசி ஆனந்தனும், அருகருகேஅமர்ந்திருந்து கதைத்துக்கொண்டிருந்தனர். அமைச்சர் கே, பி. இரத்னயக்கா எழுந்துவந்து திரு. இராசதுரையுடன் சிறிது நேரம் கதைத்தார். அதன்பின் திரு. இராசதுரை எழுந்து எதிர்ப்பக்கத்திற்கு சென்று அமைச்சர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார்.

திரு. கே. பி. இரத்தினம், திரு. க. துரைரத்தினம் ஆகி

(7ம் பக்கம் பார்க்க)



தமிழ்பேசும் மக்களின்
தனிப்பெருந்தலைவனே
அகிம்சா மூர்த்தியே
சட்ட மேதையே,
தந்தை செல்வா
எமது இதயபூர்வமான
அஞ்சலி

பரணி மருந்துச்சாலை
ஸ்தாபனம்
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

6051

### தவறியது

கைக்கடிகாரத் துடன் இணைந்த வளையல் (Ladies Wristlet) ஒன்று வெலிங்டன் சந்திக்கும், மின்சாரநிலைய வீதிக்கும் இடையே தவறவிடப்பட்டுள்ளது. எவராவது கண்டெடுத்தால் எமது ஸ்தாபனத்தில் ஒப்படைத்து பெறுமதிமிக்க சன்மானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். த. ரோரு லிமிட்டெட், 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7651

தமிழ்ஈழ விடுதலைச் சிற்பியும்,
தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவனும்,
தமிழரசுத் தந்தையும்
ஈழத்துக் காந்தியும் ஆகிய
அமரர் மூதறிஞர்
உயர்திரு சா. ஜே. வே. செல்வநாயகம்
அவர்களுக்கு

அஞ்சலியாகக் கொடிகள் அச்சிட்டு இலவசமாகவழங்க நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.
கொடிகள் வேண்டுவோர் துணியை மட்டும் கொண்டுவருக!

நியூவசந்தா ரெக்ஸ்ரைல்
பிறிண்டிங்
248/1,காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7732
6038

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegram: Eelanaadu, Telephone 389, Registered as Newspaper in Sri Lanka.